Sri N. K. PALANISAMI : இப்போது, ஹரிஜனங்கள் (தீண்டாமை சம்பந்த) கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்பட்டுவிட்டால், அவர்களுக்கு ‘ சிவில் டிஸபிலிடீஸ் ஆக்ட் ’ பிரகாரம் சர்க்கார் உதவி செய்யலாம். அப்படிப்பட்ட உதவி சாதாரண ஹரிஜனங்களுக்காவது கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால், ஹரிஜன கிருஸ்தவர்களுக்கும் அந்த உதவி கொடுக்கப்படுமா ?

The Hon. Sri P. KAKKAN : சிவில் டிஸபிலிடீஸ் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளுக்கு எல்லாம், ஹரிஜனங்களுக்காக வக்கீல்கள் சர்க்காரிலிருந்து ஆஜராவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஹரிஜனக் கிருஸ்தவர்கள் சம்பந்தமாக இத்தகைய வழக்குகள் விஷயமாக, கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்கிறேன்.

Electricity Operation Subordinate Service Staff Association, Coimbatore

* 38 *Q.*—**Sri N. K. PALANISAMI :** Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Labour Officer concerned met the members of the Central Committee of the Government Electricity Department of Operation Subordinate Service Staff Association at Coimbatore during May 1957 and promised to consider their grievances if they called off their strike which was due to take place on 27th June 1957;

(*b*) how far the Government have met their demands with regard to wage, leave and other facilities; and

(*c*) whether the Chairman, Electricity Board received any communication from the Central Committee about the victimisation of the members of the staff for joining the agitation during August 1957?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) The Labour Officer met the Vice-President of the Association in May 1957, but he made no promise.

(*b*) The Madras State Electricity Board has sanctioned the concession of rent-free quarters and free lighting to the Operation Subordinate Service Staff on a phased programme spread over a period of four years and has also increased their minimum daily allowance from 75 N.P. to Re. 1.

(*c*) Yes, Sir.

Sri N. K. PALANISAMI : ஏற்கெனவே **1956**-ம் ௵ எப்ரல் மாதம் **29**ந் தேதியில் இந்த மாதிரியான சலுகைகள் கொடுப்பதற்கு சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மேட்டூர் மின்சாரத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். இந்தச் சலுகைகளை உடனடியாக மற்ற இடங்களிலும் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri V. RAMIAH : இங்கு குறிப்பிட்ட பகுதிகள் **1956-ல்** ஒப்புக் கொள்ளப்பட்ட பகுதிகள். மற்றப்படி அதே முறையில் கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது.